# PSWS செய்திமடல்

**ஜரீன் சேவியர் அவர்களின் செய்தி**

அன்புள்ள உறுப்பினர்களே,

நீங்கள் எங்கள் இரண்டாவது செய்திமடலை, உங்கள் கோரிக்கைப்படி சேர்க்கப்பட்ட தமிழாக்கத்துடன் மகிழ்ச்சியுடன் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் மே 1ஆம் தேதி, உலக தொழிலாளர் தினம் (May Day) கொண்டாடப்படுகிறது. இது அனைத்து தொழிலாளர்களையும் கௌரவிக்கும் ஒரு நாள் ஆகும்.

இந்த ஆண்டில், PSWS அமைப்பு பெண்தொழிலாளர்கள் தங்களும் மற்றும் மற்ற பெண்தொழிலாளர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வில் பங்கேற்க உதவுகிறது. இந்த பெண்கள், பிற நபர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து பேரணியில் கலந்து கொண்டு, தேசிய அளவிலான உரிமை மேடையில் தங்களது குரலை வெளிப்படுத்துவார்கள். பெண்தொழிலாளர்களின் உரிமைகளில் எந்த சமரசமும் இல்லை என்பதை வலியுறுத்தி, சட்டத்திலும் நடைமுறையிலும் சமத்துவத்தை கோருவார்கள்.

Sahabat Wanita அமைப்பு, பெண்தொழிலாளர்கள் இந்த நாட்டை உருவாக்க உதவுகின்றனர் என்ற நம்பிக்கையில் தொடங்கப்பட்டது. ஆகவே, அவர்கள் தங்கள் உழைப்பிற்கும் தியாகங்களுக்கும் அங்கீகாரம் மற்றும் மரியாதை பெற தகுதியானவர்கள்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அனைத்து தொழிலாளர்களுக்கும், குறிப்பாக பெண்தொழிலாளர்களின் பங்களிப்பிற்கும் நாங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம்.




**மார்ச் 2026 நடுப்பகுதி – ஏப்ரல் 2026 நடுப்பகுதி வரை நடைபெற்ற செயல்பாடுகள் :**

### வெளிப்புற பங்குதாரர்களுடன் ஈடுபாடு

- **அறிக்கை வெளியீடு மற்றும் கலந்துரையாடல் *(Government Procurement Bill 2025) | Center to Combat Corruption and Cronyism (C4 Center) | 31 மார்ச் 2026***

C4 Center, Government Procurement Act 2025 குறித்து ஒரு அறிக்கையை வெளியிட்டு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத்தன்மையை மேம்படுத்த வேண்டிய முக்கிய அம்சங்களை எடுத்துக்காட்டியது. கொள்கை அமைப்பாளர்கள், சமூக அமைப்புகள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொண்டு, மலேசியாவின் கொள்முதல் அமைப்பை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை விவாதித்தனர்.

- **பெண்கள் மற்றும் குடியேற்ற தொழிலாளர்களுக்கான மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்தல் குறித்த கலந்துரையாடல் *| Samsung | 2 ஏப்ரல் 2026***

சம்சுங்(Samsung) நிறுவனம், பெண்கள் மற்றும் குடியேற்ற தொழிலாளர்களை நிர்வகிக்கும் தங்களது தற்போதைய நடைமுறைகளை பகிர்ந்து கொள்ளவும், அவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை பெறவும் PSWS அலுவலகத்துக்கு வந்தது. PSWS தனது பயணத்தையும் தொடர்ந்து நடைபெறும் பணிகளையும் பகிர்ந்தது. எதிர்காலத்தில் இணைந்து ஒரு பயிற்சி பட்டறை நடத்தும் வாய்ப்புகளையும் இரு தரப்பும் ஆராய்ந்தன.

- **பெண்தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த கலந்துரையாடல் *| Social Security Organisation (PERKESO) | 14 ஏப்ரல் 2026***




Social Security Organisation (PERKESO), Persatuan Sahabat Wanita Selangor (PSWS) உடன் சந்தித்து, குறிப்பாக சுயதொழில் புரிபவர்கள், வேலைஇல்லாதவர்கள் மற்றும் வீட்டுத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பெண்களுக்கான சமூக பாதுகாப்புத் திட்டங்களை விவாதித்தது. இந்த அமர்வு, நலன்களைப் பற்றிய விழிப்புணர்வையும் அணுகலையும் மேம்படுத்தும் முயற்சிகளை வெளிப்படுத்தியது. PSWS உறுப்பினர்களுக்கான எதிர்கால ஒத்துழைப்புகளையும் இரு தரப்பும் ஆராய்ந்தன.

### உள் கூட்டம்

- **பணியாளர் கூட்டம் (நேருக்கு நேர்) | 17 ஏப்ரல் 2026**

இடைநிலை திட்ட மேலாளருடன் சேர்ந்து, பணியாளர்கள் மற்றும் EXCO உறுப்பினர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இதில், ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான PSWS செயல்பாடுகள் குறித்து, அதிகபட்ச தாக்கத்தை உறுதிசெய்யும் வகையில் திட்டமிடப்பட்டது.

# PSWS செய்திமடல்

### நிர்வாகக் குழு

- Pushpa Doraisamy
- Muthammah Maddacanno
- Devaki Arumugam
- Mageswary Adaikalam
- Stella Pereira
- Vanaja Sangalrayan
- Jayanthi Anthonisamy

### குழு

- Irene Xavier
- Kerrty Gogelawanan
- Annie Gerra Gunalan
- Jagathesan Muthusamy
- Dorathy Benjamin(Consultant)

### தொடர்ந்து நடைபெற்று வரும் பணிகள் :

- மலேசிய வீட்டு தொழிலாளர்களை பற்றிய ஆய்வுக்கான தரவு சேகரிப்பு இறுதிக்கட்டத்தை முடித்தல் மற்றும் இறுதி அறிக்கையை தயாரித்தல்.
- 2026 சர்வதேச மகளிர் தினம் மற்றும் மே தினத்தை முன்னிட்டு, மலேசியாவில் பெண்தொழிலாளர்களின் உரிமைகளை மையமாகக் கொண்டு உறுப்பினர்களுக்கான நிகழ்வை திட்டமிடுதல். இதில் கலந்து கொள்ள விரும்பும் உறுப்பினர்கள், *11 மே 2026*க்குள் *Jega*-வை தொடர்பு கொள்ளவும்.
- 2026 மே தின பேரணிக்காக Parti Sosialis Malaysia (PSM) உடன் இணைந்து பணிகளைத் தயாரித்தல்.
- PSWS 2025 ஆண்டுக்கான தணிக்கை (Audit) அறிக்கையைத் தயாரித்தல்.
- Kapar Women's Economic Empowerment Project (WEEP) – முன்முயற்சி (pilot) திட்டம்.
- 16 ஜூன் – சர்வதேச வீட்டு தொழிலாளர் தினத்திற்கான தயாரிப்புகள்.
- North South Initiative மற்றும் PSWS இணைப்பு (இளைஞர் மூலோபாயம்) – Taylor's University உடன் பகிர்வு அமர்வுகளுக்கான (ஆலோசனை நிலை) திட்டமிடல் – மே 2026.
- Sabah Medical Services Union உடன் இணைந்து மே 2026ல் நடைபெறவுள்ள பட்டறைக்கான தயாரிப்புகள்.

### வரவிருக்கும் செயல்பாடுகள் :

- மே தின பேரணி 2026 | 01 மே 2026

PSWS, தொழிலாளர் சீர்திருத்தங்களை வலியுறுத்தும் நோக்கில் Parti Sosialis Malaysia (PSM) உடன் இணைந்து மே தின பேரணியில் கலந்து கொள்கிறது. இந்த செயல்பாட்டில் கலந்து கொள்ள விரும்பும் உறுப்பினர்கள், 30 ஏப்ரல் 2026க்குள் Annie-யை தொடர்பு கொள்ளவும். இடங்கள் குறைவாக உள்ளதால், முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.












### அறிந்து கொள்வோம் : கட்டாய உழைப்பு

கட்டாய உழைப்பு என்பது உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களை பாதிக்கும் ஒரு மிகக் கடுமையான மனித உரிமை பிரச்சினையாகும். இது, தனிநபர்கள் தங்கள் விருப்பத்திற்கு எதிராக, அச்சுறுத்தல் அல்லது கட்டாயப்படுத்தல் மூலம் வேலை செய்ய வைக்கப்படும்போது ஏற்படுகிறது.

பல சமூக அமைப்புகள் (CSOs) மற்றும் அரசு அல்லாத அமைப்புகள் (NGOs) இந்த பிரச்சினையைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கச் செயல்பட்டு வருகின்றன, ஏனெனில் இது அடிப்படை மனித உரிமைகளின் மீறலாகும்.

கட்டாயத் தொழில் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை; இது மலேசியாவை உட்பட உலகம் முழுவதும் காணப்படுகிறது. பெண்கள், குழந்தைகள், குடியேற்ற தொழிலாளர்கள் மற்றும் வறுமையில் வாழும் சமூகங்கள் இந்த பிரச்சினையால் அதிகமாக பாதிக்கப்படும் மற்றும் மிகவும் பாதிப்பு அடையக்கூடிய குழுக்களாக உள்ளனர்.

# PSWS செய்திமடல்

**கட்டாய உழைப்பு என்றால் என்ன?**

கட்டாயத் உழைப்பு என்பது, எந்தவொரு நபரும் தன்னிச்சையாக ஒப்புதல் அளிக்காமல், தண்டனை அல்லது அச்சுறுத்தல் மூலம் வேலை செய்ய நிர்பந்திக்கப்படும் அனைத்து வேலைகள் அல்லது சேவைகளைக் குறிக்கிறது.

**கட்டாய உழைப்பின் முக்கிய குறியீடுகள்**

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) கட்டாய உழைப்பை அடையாளம் காண 11 முக்கிய குறியீடுகளை குறிப்பிடுகிறது: பாதிப்புக்குள்ள நிலையை தவறாக பயன்படுத்துதல், ஏமாற்றுதல், நகர்வை கட்டுப்படுத்துதல், தனிமைப்படுத்தல், வன்முறை, மிரட்டல், அடையாள ஆவணங்களை பறிமுதல் செய்தல், சம்பளத்தை தடுத்து வைத்தல், கடன் அடிமைத்தனம், மோசமான வேலை மற்றும் வாழ்வு நிலைகள், மற்றும் அதிகப்படியான கூடுதல் நேர வேலை.

கட்டாய உழைப்பு பல்வேறு துறைகளில் பல வடிவங்களில் வெளிப்படுகிறது. இது பொதுவாக காணப்படும் துறைகள்:

- வீட்டுப் பணிகள் (Domestic work)
- உற்பத்தி தொழில் (Manufacturing)
- கட்டுமானத் துறை (Construction)
- எண்ணெய் பனைத் தோட்டங்கள் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் போன்ற தோட்டத் துறைகள் (Palm oil and Tea Plantations.)

இந்த முக்கியமான தலைப்பை பற்றி நீங்கள் சிறிது நேரம் எடுத்துக் கொண்டு அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். எங்கள் மே மாத செய்திமடலில், கட்டாயத் தொழிலின் 11 அடையாளங்கள், அது ஏன் நிகழ்கிறது என்பதற்கான காரணங்கள் மற்றும் மேலும் விரிவான விளக்கங்கள் வழங்கப்படும். தொடர்ந்து எங்கள் செய்திமடல்களைப் பின்தொடருங்கள்.




**மூலம்:** *https://flbusiness.network/what-works/*